# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-241/2022

Prosecution witness – PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.ஆனந்தராஜ் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present)

29.01.2026– 12.40 PM

முதல் விசாரணை:–

1. நான் இராமநாதபுரம் மாவட்ட குழந்தைகள் உதவி மையத்தில் ஒருங்கிணைப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். பட்டியல் சாட்சிகள் 3 முதல் 5 பேரை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 17.06.2022 அன்று நான் அலுவலகத்தில் இருந்த போது 1098 என்ற இலவச தொலைபேசி எண்ணிற்கு மட்டியரேந்தல் கண்மாயில் கள்ளக்குறிச்சி மாவட்டம் உளூந்தூர்பேட்டை தாலுக்கா ஆரநத்தம் கிராமத்தை சேர்ந்த ஏழுமை என்பவரது மகன் ராஜமாணிக்கம் வயது 12 என்ற சிறுவன் செம்மறி ஆடுகளை மேய்த்தி வருவதாக தகவல் வந்தது. வந்த தகவலை தாழியனேந்தல் கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் சொன்னேன். நானும், கிராம நிர்வாக அலுவலர் சரண்யா, வருவாய் ஆய்வாளர் பெரியசாமி, உதவி ஆய்வாளர் வசந்தா, கிராம உதவியாளர் ஆகியோருடன் இணைந்து மட்டியரேந்தல் கிராமத்தில் உள்ள நாகனேந்தல் கண்மாயில் சென்று பார்த்த போது 12 வயது சிறுவன் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தான்.

2. சிறுவனிடம் விசாரித்த போது எனது பெயர் ராஜமாணிக்கம் என்றும் அப்பா ஏழுமலை இறந்துவிட்டதாகும், அம்மா குப்பாயி மற்றும் உடன் பிறந்தவர்கள் மூன்று பேர் இருப்பதாகவும், கீழ பணியடியேந்தல் கிராமத்தை சேர்ந்த பாலு மகன் பெருமாள் என்பவருக்கு சொந்தமாக செம்மறி ஆடுகளை கடந்த ஒன்றரை ஆண்டுகளாக ஆடு மேய்த்து வருவதாகவும், பெருமாள என்பவர் எனது அம்மாவிடம் ரூ.50 முண்பணமாக வாங்கியதாகவும், அதற்கு பின்பு மீண்டும் ரூ.70 ஆயிரம் வாங்கியதாகவும் குடும்ப

சூழ்நிலை காரணமாக பெருமாள் என்பவரின் ஆடுகளை ஒன்றரை ஆண்டுகளாக மேய்த்து வருவதாக கூறினார். கிராம நிர்வாக அலுவலர் சரண்யா அவர்கள் பரமக்குடி கோட்டாச்சியர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து சிறுவனை கோட்டாச்சியர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றோம். கோட்டாச்சியர் விசாரணை முடித்த பின்னர் கிராம நிர்வாக அலுவலர் சிக்கல் காவல் நிலையத்தில் பெருமாள் என்பவர் மீது புகார் கொடுத்தார். சிறுவனை அழைத்துக்கொண்டு இராமநாதபுரம் குழந்தை நலதுறையில் ஆஜர்படுத்தி இராமநாதபுரம் ஸரி ராமலிங்க அன்பு இல்லத்தில் சிறுவனை சேர்த்தோம். இது சம்பந்தமாக 18.06.2022ம் தேதி சிக்கல் காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை: –</u>

1. என்னை விசாரணை செய்த விசாரணை அதிகாரி யார் என்றால் சிக்கல் காவல் நிலைய சார்பு ஆய்வாளர். நான் போலிசார் விசாரணையில் கூறிய விவரங்களைத்தான் முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் போலிசார் விசாரணையில் எந்த தேதியில் சம்பவ இடத்தில் கூடினோம் என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். மாலை 03.30 மணிக்கு கூடியுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். நான் குழந்தைகள் உதவி மையத்தின் ஒருங்கிணைப்பாளர் என்பதால் பாதிக்கப்பட்ட சிறுவனை பார்த்த போது அவரிடம் இருந்து அடையாள அட்டை உட்பட வேறு ஆவணங்களை பார்த்தேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் வைத்து பாதிக்கப்பட்ட சிறுவன் ஆடு மேய்த்து கொண்டிருந்தான் என்பதை காட்டுவதற்கு புகைப்படம் ஏதாவது ஏடுத்தேனா என்றால் எடுத்தேன். அதை சார்பு ஆய்வாளர் விசாரணையில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. வருவாய் கோட்டாச்சியரிடம் சமர்பித்துள்ளேன்.

2. பாதிக்கப்பட்ட சிறுவனின் தாயாரிடமோ, உறவினரிடமோ இந்த சம்பவம் தொடர்பாக ஏதாவது விசாரணை செய்தேனா என்றால் இல்லை. பாதிக்கப்பட்ட சிறுவனை கோட்டாச்சியரிடம் ஒப்படைத்த பிறகு நான் சென்றுவிட்டேனா என்றால் இல்லை. நான்தான் கோட்டாச்சியர் உத்தரவு படி சிறுவனை குழந்தைகள் நல குழுவிடம் ஒப்படைத்தேன். இந்த வழக்கில் சிறுவன்

பாதிக்கப்பட்டுள்ளதால் குழந்தைகள் நல அமைப்புதான் புகார் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. கோட்டாச்சியர் உத்தரவு படி கிராம நிர்வாக அலுவலர் கொடுத்துள்ளார். எதிரி ரூ.50 ஆயிரம் பணத்தை பாதிக்கப்பட்ட சிறுவனின் குடும்பத்தாரிடம் கொடுத்ததாக கூறிவது வழக்கிற்காக பொய்யாக கூறிகிறேன் என்றால் சரியல்ல. பாதிக்கப்பட்ட சிறுவனும் அவரது தாயாரும் கூறியதன் பேரிலே நான் கூறினேன். சம்பவ இடத்தில் பாதிக்கப்பட்ட சிறுவனுடன் வேறு யாரையாவது பார்த்தேனா என்றால் அவருடன் ஒரு பெரியவர் இருந்தார். அவர் யார் என்று நான் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் சிறுவன் அந்த இடத்தில் இல்லை என்றாலும், ஆடுகள் எதுவும் மேய்க்க வில்லை என்றாலும் சரியல்ல. வி.ஏ.ஓ கொடுத்த புகாருக்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இது போன்று சம்பவம் நடந்திருந்தால் பாதிக்கப்பட்ட சிறுவனிடம் அவன் சம்பந்தமான ஆவணங்களை வாங்கிருப்போம் என்றால் சம்பவம் நடந்தது உண்மைதான் ஆனால் ஆவணங்கள் எதுவும் வாங்கவில்லை.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி